ஆனால், இரண்டாவதாக புலால் உணவு விடுதியில் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை சமர்ப்பித்தார்கள். அது மட்டு மல்ல. திடீரென்று ஒரு நாள் மாணவர்கள் ஆடு, கோழி எல்லாம் வாங்கிக்கொண்டு வந்து, அங்கு புலால் உணவு சமைத்துவிட்டார்கள். திரு. கருமுத்து தியாகராஜ செட்டியார் அவர்களுக்கு சினம் ஏற்படு வதற்கு இது காரணமாக இருந்ததாலும், வேலை நிறுத்தம் ஏற் பட்ட காரணத்தினுலும், கல்லூரியை மூடிவிட்டார்கள். அதற்குப் பிறகு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலையிட்டு, மாணவர்களின் பிரதிநிதிகளோடு பேசி, திரு. கருமுத்து தியாகராஜ செட்டியாருடனும் பேசி, ஒரு சமரச முடிவைக் கண்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கொடுத்த குறிப்பிலிருந்து இன்று கல்லூரி திறக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று தெரியவருகிறது. மாணவர்களும் இதற்கு இசைவு தந்திருக் கிறார்கள் என்று கூறியிருக்கிறார்கள். நிபந்தனை என்னவென்றால் ஒரு மாத காலத்திற்குள் இந்தப் பிரச்னைக்கு எந்த வகையிலாவது தீர்வு கண்டு, மாணவர்களின் நோக்கம் நிறைவேறுவதற்கு ஏதேனும் ஒரு வழி காணவேண்டும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஏதேனும் ஒரு வழி காணலாம் என்ற உறுதிமொழியை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் கல்லூரி திறக்கப்படக்கூடும் என்ற கருத்து அறிவிக்கப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு இந்தப் பிரச்னையைப் பற்றி அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. ஆகவே, நிலைமை இந்த அளவோடு இருக்கிற காரணத்தினால் பேரவையின் பிற அலுவல்களை ஒற்றிவைத்து, இதைப் பற்றி விவாதிப்பதற்கு வேண்டிய அவசியமில்லை என்று கூறி இந்த அளவோடு நிறுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு பிறகு பேரவையின் பிற அலுவல்களை ஒற்றி வைத்து, இது பற்றி விவாதிக்கத் தேவையில்லை என்று நான் கருதுவதால். இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(ஆ) ஹவுஸ் சர்ஜன்கள் வேலை நிறுத்தம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காங்கிரஸ் தரப்பில் திரு. ராம மூர்த்தி, திரு. மார்டின், திரு. சித்தன், திரு. சுவாமிநாதன் ஆகி யோர்களும், கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்டு) கட்சித் தரப்பில் திரு. வி. கே. கோதண்டராமன், சி. கோவிந்தராசன், திரு. கே. ஆர். ஞான சம்பந்தம், திரு. என். வரதராசன், ஆகியோர்களும், எஸ். எஸ். பி. தரப்பில் திரு. க. ர. நல்லசிவமும், சுதந்திரா கட்சி தரப்பில் டாக்டர் ஹாண்டே அவர்களும், ஆக 10 உறுப்பினர்கள் ஹவுஸ் சர்ஜன்கள் வேலை நிறுத்தம் சம்பந்தமாக, சட்டப்பேரவை விதி 42-ன் கீழ் இந்தப் பேரவையின் பிற அலுவல்களை ஒற்றிவைத்து, விவாதிக்க வேண்டும் என்று ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக் கிறார்கள்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த ஹவுஸ் சர்ஜன்கள் ஸ்ட்ரைக்கைப் பொறுத்தவரையில், அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஸ்ட்ரைக் செய்திருக்கிறார்கள். இந்தக்

கோரிக்கைகளும், அது சம்பந்தமான பேச்சுவார்த்தைகளும் ஒரு புறம் இருக்க, அவர்கள் இன்றைய தினம் செய்திருக்கிற வேலை நிறுத்தம், அதனுடைய நிலைமைகள், அதனுடைய விளைவுகள் இவற்றை இந்த மன்றம் பரிசீலிக்கவேண்டியது அவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமின்றி இந்த ஸ்ட்ரைக் எந்த சூழ்நிலையில், எந்த நிர்ப்பந்தத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிற பொழுது, பல காலமாக அமைச்சர் அவர்களுக்கும், இந்த சர்ஜன்களுக்குமிடையே நடைபெற்றிருக்கிற பேச்சுவார்த்தைகளின் விளைவாக, அந்தப் பேச்சுவார்த்தைகள், முழுமை பெறுததன் காரணமாக, அல்லது இரு தரப்பினருக்கும் திருப்தி அளிக்காததன் காரணத்தினல் இந்த வேலை நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது என்ருலும் கூட, இந்த வேலை நிறுத்தம் ஒரு புறம் இருக்க, இதனுடைய விளைவுகள் இந்த மாநிலத்தை மிக அதிகமாக பாதிக்கின்ற அளவுக்கு இருக்கிறது.

இன்றையதினம் நாட்டில் இருக்கிற எசென்ஷியல் சர்வீஸ்களைப் பொறுத்தவரைக்கும் அடிக்கடி இது போன்ற வேலைநிறுத்தம் ஏற்படுகின்ற ஒரு நிர்ப்பந்தத்திற்கு அவர்கள் ஆளாவதற்கு, அதைத் தவிர்க்க முடியாத நிலையில் நம்முடைய அரசாங்கமும் நாமும் இருந்துகொண்டிருக்கிறோம். நாட்டிலுள்ள அத்தியாவசியமான தொழில்களில், பணிகளில், வேலைகளில் ஈடுபட்டிருப்பவர்கள் எந்த நேரத்திலும் இப்படிப்பட்ட ஒரு நிர்ப்பந்தமான சூழ்நிலையை உண்டாக்குவதற்கான நிலைமை ஏற்படுமேயானல், அவர்களெல்லாம் தங்களுடைய கோரிக்கைகளை, வேலைநிறுத்தம் மூலம் தான் தீர்த்துக் கொள்ள முடியும் என்ற நிலைமை உண்டாகிவிடுமேயானல், போகப் போக எந்த அத்தியாவசியப் பணிகளில் இருப்பவர்களையும் சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலைமையும், அதன் விளைவாக பல நேரங்களில் அரசாங்கமே ஸ்தம்பித்துவிடுகிற நிலைமையும் ஏற்பட்டுவிடும். சில காலத்திற்கு முன்பு மின்சார வாரிய என்ஜினியர்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள். இன்று ஹவுஸ் சர்ஜன்கள் செய்துகொண்டிருக்கிறுர்கள். எங்கேயோ ஒரு சிக்கல் இருந்து கொண்டிருக்கிறது. நேரடியான பேச்சுவார்த்தைகள் மூலம் சில அத்தியாவசியமான சர்வீஸ்களில் ஈடுபட்டிருப்பவர்களிடம் நல்ல முறையில் பேசி, நல்ல முறையில் அவர்கள் கோரிக்கைகளை பேசித் தீர்க்க முடியாத ஒரு நிர்ப்பந்தமான சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது.

என்ன காரணம் என்று தெரியவில்லை. சில நேரங்களில் அரசியல் நோக்கம் வெளியாகிறது. இந்த அத்தியாவசிய சர்வீஸ்களைப் பொறுத்தவரைக்கும், அவர்களையெல்லாம் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களாக வைத்து, அந்தப் பிரச்னைகளுக்கு தீர்வு காண வேண்டும். அவர்கள் ஸ்ட்ரைக் செய்வதன் மூலம் தான் இந்தப் பிரச்னைகளை தீர்க்க முடியும் என்ற நிலைமை ஏற்படுமேயானல், அத்தியாவசிய சர்வீஸ்களைப் பொறுத்தவரைக்கும் இந்த நாட்டினுடைய எல்லா நிலைமைகளையும் எந்த நேரத்திலும் சீர்குலைக்க முடியும் என்ற நிலைமை ஏற்பட்டுவிடும். இந்த அரசைப் பொறுத்த

வரையிலும் இது போன்ற பிரச்னைகளை அணுகுகின்ற முறையில் தவறாக இருக்குமோ என்ற நிலைமை, ஐயம் ஏற்படுகிறது. மிகவும் அத்தியாவசியமான சர்வீஸிலுள்ளவர்கள் வேலை நிறுத்தம் செய்தால் எந்த அளவுக்கு மக்களுடைய அன்றாட வாழ்க்கையை அது பாதிக் கிறது என்பதைக் கருத்தில் கொண்டு, எந்தளவிலே இதை அணுக வேண்டும், இதை அணுகுகின்ற முறையில், அதைப் பொறுத்த அளவில் எப்படி பாலிஸி காரணமாக இருக்கிறது என்பதைப்பற்றி அவை பரிசீலிக்கின்ற முறையில், விவாதிக்கின்ற முறையில், இந்த அவையினுடைய மற்ற அலுவல்களை ஒற்றிவைக்கவேண்டும் என்று கோருகிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, ஹவுஸ் சர்ஜன்கள் வேலை நிறுத்தம் செய்திருப்பது ஒரு முக்கியமான விஷயம் நாட்டில் ஒரு மதிப்புள்ள தொழில், வருவாய் உள்ள தொழில் என்று கருதப் படுகிற இந்தத் துறையில் இருக்கும் ஹவுஸ் சர்ஜன்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்கள் என்றால், தமிழ் நாட்டில், ஏன் நம் நாட்டி லேயே வேலையில்லாப் பிரச்னை எந்த அளவில் வளர்ந்து வருகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. அவ்வளவு முக்கியம் வாய்ந்தது. எச்சரிக்கை செய்வதாகும்.

அவர்கள் சொல்லும் வாதம், வேலையில்லாமல் இருக்கிறோம் என் பதால், அவர்கள் தாங்கள் கிராமப் புறங்களில் வேலை செய்யத் தயாராக இருக்கிறோம், கிராமங்களில் அதிகமான ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்தி எங்களுக்கு வேலை வாய்ப்புகளைக் கொடுக்க வேண்டும். என்று கேட்கிறார்கள்.

ஆகவே, அதைப் பற்றி பரிசீலனை செய்ய வேண்டும். ஐந்தாண்டு களுக்குப் பிறகு வேலைக்கு வரும்போது, அவர்களுக்குக் கொடுக்கப் படும் ரூ. 175 வாழ்க்கைக்கு போதவில்லை, அதை அதிகப்படுத்த வேண்டும் என்றும் கேட்கிறார்கள். இவற்றையெல்லாம் பரிசீலிக்க வேண்டும். இப்படி இவர்கள் வேலை நிறுத்தம் செய்வதால், தமிழ் நாட்டில் உள்ள ஆஸ்பத்திரிகளில் பாதகம் ஏற்படும் என்பதை கவனத்தில் எடுத்துக் கொண்டு, அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து இதைப் பற்றி விவாதிக்க வேண்டும் என்று கோருகிறேன்.

திரு. க. ர. நல்லசிவன் : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, எனக்கு முன்னால் நண்பர்கள் முக்கியமான விஷயங்களைத் தெரி வித்தார்கள். அவர்களுடைய சங்கம், சென்ற வாரம் அமைச்ச ருக்குக் கொடுத்த மகஜருக்கு பதில் கிடையாது என்று சொல்லி யிருக்கிறது. அதிகார பூர்வமான பதில் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். மேலும், வைத்தியக் கல்லூரிகளில் தேவையை அடிப்படையாகக் கொண்டு அட்மிஷன் கொடுக்கப்படவேண்டும் என்றும் கோரியிருக்கிறார்கள். வெளியிலே இருக்கும் தேவையை அனுசரித்து, கல்வி வழங்குவது சரியாக இருக்கும் என்பதையும் பரிசீலிக்க வேண்டும். இது எல்லாத் துறைகளுக்கும் பொருந்தும். இவற்றையெல்லாம் பற்றி விவாதிக்க சபையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று கோருகிறேன்.

DR. H. V. HANDE : Sir, I have given notice of the following motion. "Under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules, I move that this House stands adjourned to discuss a matter of urgent public importance namely, the strike by the House Surgeons in the State, and their urgent and important grievances such as their demand for higher stipends and conditions of service and to point out the need for immediate redressal of the same ".

Sir, several Members belonging to different parties have put their points of view. I want to stress very emphatically that at least an hour or two will have to be allotted so that we can discuss without any recrimination the exact problem of the House Surgeons and the future doctors. After they finish the House Surgeon's course they become doctors. So, their problem consists of two parts present and future.

The present pressing problem of the House Surgeons is that they want increased stipend. After more than 5 years of course, they are practically at their money's end and they could not properly look after themselves financially. Even their parents are not prepared to look after them after five years. Sir, the medical course is an expensive course. Even though the Government have got a subsidised scheme, the boys and girls have to spend a lot of money after the fourth or fifth year and they find it very difficult to prosecute their studies further. Therefore, they have asked for a sum of Rs. 250 which would foot their bill. This Government should consider their request sympathetically and the financial implication also is not very much. That is one aspect of the matter.

The second aspect of the matter is that after they have passed the examination, what is the position? Unemployment stares at their face. The Government are putting forth the theory that they are not prepared to serve in the Primary Health Centres. But the present position is that many of them who have applied for the job do not get the job. I have met the medical students and they have stated that their problem begins in the fourth year itself and they get worried about their future employment. They have highlighted and spotlighted their problem and they want redressal from the Government. . . . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அட்ஜர்ன்மெண்ட் மோஷனுக்கு உரியதை மட்டும் சொல்லுங்கள். டீடெயில்ஸுக்கு உள்ளே போகாதீர்கள்.

DR. H. V. HANDE : Sir, other Hon. Members were given a chance to explain it. If the Hon. Speaker is going to adjourn the House to discuss this matter I will stop now itselfy but it is a rarity and it never happens.

[Dr. H. V. Hande]

Sir, regarding admission and number of seats in the medical colleges, yesterday there was a discussion and the Hon. Minister for Finance and the Hon. Minister for Education made two statements and the Hon. Speaker also was present at that time. The Hon. Minister for Finance had stated that a few more medical colleges would be started during the Fourth Five-Year Plan period.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த விளக்கத்திற்குள்ளே போனால் விவாதத்தை தொடங்குவீர்கள். டீடெயில்ஸ்ஸெல்லாம் விவாதத்தின் போதுதான் சொல்லவேண்டும்.

DR. H. V. HANDE : Sir, the point which I am going to raise is the most important one and that would require the House to be adjourned. As there has been no proper understanding between the Hon. Minister for Finance and the Hon. Minister for Education on this issue. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறுபடியும் நேற்று நடந்ததைத் திரும்பச் சொல்லுகிறீர்கள். இரண்டு அமைச்சர்களும் விளக்கம் கொடுத்த பிற்பாடு அதைப் பற்றி என்ன பேச்சு? அவர்கள் விளக்கம் கொடுத்து, கருத்து வேறுபாடு இல்லை என்று எஸ்டாப்ளிஷ் ஆன பிறகு அதைப் பற்றி பேசுவது முறையல்ல.

DR. H. V. HANDE : Therefore, will this Government discuss this matter and come to a decision so that the grievances of the House Surgeons could be redressed. The Hon. Minister, the Secretary to Government in charge of Health, the Director of Medical Education and even the Hon. Minister for Finance could sit together today itself and see that this unfortunate strike is averted.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மருத்துவக் கல்லூரிகளில் ஹவுஸ் ஸர்ஜன்கள் வேலை நிறுத்தம் செய்வது என்பது மிக மிக வருந்தத்தக்க ஒன்றாகும். அதன் காரணமாக நோயாளிகள் எவ்வளவு இடர்பாடுகளுக்கு உள்ளாவார்கள் என்பதை அறிக்கையில் சுட்டிக்காட்டி யிருக்கிறேன். இன்று வேலை நிறுத்தம் ஏற்பட்டிருப்பது மிக்க வருந்தத்தக்கது.

நான் மதுரைக்குச் சென்றிருந்தபோது, ஹவுஸ் சர்ஜன்கள் சார்பாக, விண்ணப்பங்கள் கொடுத்தார்கள். அவர்களிடத்தில் விண்ணப்பங்களுக்கு ஏற்ற விளக்கங்கள் தந்து, அதுபற்றி நடவடிக்கைகள் அரசு எடுக்கும் என்றும் சொன்னேன். அதற்குப் பிறகு, விளக்கத்தை ஏற்காமல், வேலை நிறுத்தம் செய்ய ஆயத்தப்படுகிறார்கள் என்று அறிந்து, எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகளை அறிவியுங்கள் என்று அந்த அந்த கல்லூரி டீன்களுக்கு மறுபடியும் சொல்லியனுப்பினேன். அதன் மேலும், வேலைநிறுத்தத்திற்கு அறிகுறிகள் தென்படுகிறது என்று தெரிந்தவுடன், மாணவர்கள் பிரதிநிதிகளைக் கூப்பிட்டு, அவர்களுடைய கோரிக்கைகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்ற நிலைகள் இருக்கின்றது என்பதையும் விளக்கச் சொன்னேன்.

1970 செப்டம்பர் 2] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

அதுமட்டுமல்ல, மருத்துவக் கல்லூரி இயக்குநர் அவர்களிடமும், மாணவர்களைக் கண்டுபேசி, இன்றைக்கு இருக்கின்ற நிலைமையை எடுத்துச் சொல்லும்படி தெரிவித்திருக்கிறேன். அதேபோல் மாணவர்களிடம், இருக்கின்ற நிலைமையை எடுத்துச் சொல்லும்படி டீன் அவர்களிடமும் தெரிவித்திருக்கிறேன். டீன் அவர்களை மாணவர்கள் யாரும் சந்திக்கவில்லை, மருத்துவத் துறை இயக்குநர் அவர்களையும் மாணவர்கள் யாரும் சந்திக்கவில்லை. திரு. நல்லசிவன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, சனிக்கிழமையன்றே பொதுநலத் துறைச் செயலாளர் அவர்கள், மாணவர்கள் பிரதிநிதிகளுக்கு ஒரு தந்தி அனுப்பியிருக்கிறார். அதில் "உங்களுடைய கோரிக்கைகள் எல்லாம் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. தக்க நடவடிக்கை எடுக்கப் படும்" என்று அந்த தந்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நானும் இதுகுறித்துப் பேசியிருக்கிறேன்.

நேற்றையதினம் இதுகுறித்துப் பத்திரிகை நிருபர்களிடத்திலும் நல்ல விளக்கமான அறிக்கை கொடுத்திருக்கிறேன். என்னுடைய அறிக்கைகளை பல்வேறு செய்தித் தாள்களிலும் விளக்கமாகக் கொடுத்திருக்கிறேன். நேற்று இரவும் நான் அறிக்கை பத்திரிகை நிருபர்களுக்கு கொடுத்தேன். இவ்வாறு பல முயற்சிகளை மேற் கொண்டபோதிலும், மாணவர்கள் திருப்தியடையாமல் இன்றைக்கு வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். மாணவர்களுடைய பிரதிநிதி கள் பத்திரிகையாளர்களிடத்தில், "உறுதிமொழிகள் எல்லாம் வெறும் கண்துடைப்பு, அதனால் எந்தப் பயனும் ஏற்படாது" என்று கூறியிருக்கிறார்கள். எவ்வளவு முயற்சிகள் எடுத்துக் கொண்டு வேலைநிறுத்தத்தைத் தடுத்து நிறுத்த முயன்றும், பயன் அளிக்காமல் இன்றைக்கு வேலைநிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது. அவர் களுடைய கோரிக்கைகளும் அவ்வளவு விபரீதமான ஆபத்து விளை விக்கக்கூடியவை அல்ல. Providing employment in Government Institutions, Medical Colleges and Primary Health Centres for medical graduates என்று முதல் கோரிக்கை வைத்திருக் கிறார்கள். அதற்கான வாய்ப்புகளை அறிக்கை மூலம் தெரிவித் திருக்கிறேன். எவ்வளவுக்கெவ்வளவு அதிகமான புதிய மருத்துவ மனைகளை ஏற்படுத்த முடியுமோ அவைகளை ஏற்படுத்துவதன் மூலமும், குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தின் மூலமும் எவ்வளவு டாக்டர்களை நியமிக்க முடியுமோ அவ்வளவு டாக்டர்களை பயன் படுத்திக்கொள்வதிலே அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

குறிப்பாக, மூன்று ஆண்டுக் கணக்கை எடுத்துப் பார்த்தாலும் எவ்வளவு டாக்டர்கள் புதிதாக அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்று தெரியவரும். 711 அசிஸ்டென்ட் சர்ஜன்கள் சுகாதாரத் துறை யிலும் மருத்துவத் துறையிலும் நியமிக்கப்பட்டு வந்தார்கள். முனிசிபல் ஏரியாக்களில் ஹெல்த் ஆபீசர்கள் வராத காரணத்தால் அங்கெல்லாம் சானிடரி ஆபீசர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 18 இடங்களில் சானிடரி ஆபீசர்களுக்குப் பதிலாக டாக்டர்களை நியமிக்கும் சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது. 50 இடங்களுக்கு மேல் பொதுநலத் துறையில் இடம் காலியாக இருக்கிறது. அங்கெல்லாம் டாக்டர்கள் வராத நிலைமை இருந்து வருகிறது. 711 அசிஸ்டென்ட்

சர்ஜன்கள் பதவி புதிதாக ஏற்படுத்தப்பட்டவையாகும். மேலும் ஆண்டுக்காண்டு ஓய்வு பெறுகிறவர்களுக்குப் பதிலாக நியமிக்கப் படும் டாக்டர்களின் எண்ணிக்கையும் இருக்கிறது. பொதுநலத் துறையில் காலி ஏற்படுகின்ற இடங்களுக்கு டாக்டர்கள் வந்தால் நியமிக்க தயாராக இருக்கிறோம். அங்கெல்லாம் டாக்டர்கள் வராத நிலைமை ஏற்படுகின்றபொழுது, ஓய்வுபெறக் கூடியவர் 58 வயது, 59 வயது வரையிலும் காலத்தை நீட்டிக்கக்கூடிய நிலைமை யும் ஏற்படுகிறது. இப்போதுகூட 50 இடங்கள் பொதுநலத் துறை யில் இருந்து வருகிறது. ஆண்டுக்காண்டு திட்டங்கள் போடப் போட, மேலும் மருத்துவ மனைகள் ஏற்பட ஏற்பட, அதிகமான வேலைவாய்ப்பைத் தேடித்தர முடியும்.

ஆனால் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தேர்வு பெற்று வருகிற எல்லா எம்.பி.பி.எஸ். டாக்டர்களுக்கும் அரசாங்கமே வேலை கொடுக்கும் என்ற உறுதி கொடுப்பது என்பது இயலாத காரியம். இந்திய அரசானாலும் சரி, மாநில அரசானாலும் சரி அப்படிப்பட்ட உறுதிமொழியைக் கொடுக்க முடியாது. அவ் வாறே பொறியியல் துறையில் தேர்வு பெற்று வருபவர்களுக்கெல் லாம் அரசாங்கமே வேலைவாய்ப்புத் தேடித் தர முடியாது. அப்படியே பி.ஏ., பி.எஸ்ஸி., எம்.எஸ்ஸி. போன்ற பட்டப் படிப்புக் களைப் பெற்று வருபவர்களுக்கெல்லாம் அரசாங்கமே வேலை தேடித் தரும் என்ற உறுதிமொழியைத் தருவது என்பது இயலாது என்பது இந்தப் பேரவையில் இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்கு தெரியும்.

அதுமட்டுமல்லாமல், தங்களுடைய கோரிக்கைகளை 31-ம் தேதிக் குள் தீர்த்துவைப்போம் என்ற உறுதிமொழி தரும்படி மதுரை மாணவர்கள் கேட்டார்கள். உறுதி மொழி தந்துவிட்டால் அதை நிறைவேற்றி வைக்கவேண்டியவனாக இருக்கிறேன். எவ்வளவுக் கெவ்வளவு வேலை வாய்ப்பு இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு செய்து தருவோம் என்று கூறினேன். ஆனால் ஒரு உறுதிமொழி மட்டும் தந்தேன். டாக்டர்களுக்கு விண்ணப்பங்கள் முறைப்படி பதிவு செய்யப்பட்டு, வேலை காலி ஏற்படுகின்ற நேரத்தில் பதிவின் அடிப்படையில் வேலை தரப்படலாம் என்று கூறினேன். பொது நலத் துறைச் செயலாளரிடத்தில் சொல்லி, இயக்குநர் மூலமாக பதிவேடு வைத்துக்கொண்டு வேலை தரப்படும் என்று உறுதிமொழி தந்திருக்கிறேன்.

டாக்டர்களை உருவாக்கித் தருவது அரசாங்க வேலைக்கு மட்டிலுமே என்ற அடிப்படையில் மருத்துவக் கல்லூரிகளை அமைக் கவில்லை. டாக்டர்கள் சொந்தமாக மருத்துவப் பணியாற்றிக் கொள்ள முன்வர வேண்டும். இன்னமும் சொல்லப்போனால், மற்ற எந்தத் துறையையும் சொந்தமாகத் தொழில் நடத்தி முன்னேற்றக் கூடிய வாய்ப்பு டாக்டர்கள் தொழிலுக்கு உண்டு. சொந்தமாகத் தொழில் நடத்தி முன்னேற வேண்டுமென்பதற்காகத்தான் டாக்டர் களுக்கு பயிற்சி தரப்படுகிறது. எல்லோருமே அரசாங்க வேலைக்குப் போய்விட முடியாது; எல்லோருக்குமே அரசாங்கம் வேலைவாய்ப் பைத் தேடித் தர முடியாது. டாக்டர்கள் சொந்தமாக சிற்றூர்ப்

1970 செப்டம்பர் 2] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

புறங்களில் தொழில் நடத்த ஆரம்பித்தால் அங்குள்ள மக்களுக்கும் வசதியாக இருக்கும். டாக்டர்களுக்கும் வசதியாக இருக்கும். உறுதிமொழி தந்து எல்லோரையும் அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்கிறார்கள். எல்லோரையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ள முடியாது. அப்படிச் செய்தால் எல்லாத் துறையில் உள்ளவர்களும் அப்படிக் கேட்பார்கள்.

வேலைவாய்ப்பு தன்மையைப்பற்றி எடுத்துத் தெரிவித்தேன். வேறுபல மாநிலங்களிலிருந்து பொதுநலத் துறைச் செயலாளருக்கும், எனக்கும் ஒரு குறிப்பு வந்தது. உத்திரப் பிரதேசத்திலுள்ள லக்னோவிலிருந்து அம்மாநில பொதுச் சுகாதாரத் துறைச் செயலாளர் அவர்கள் ஒரு கடிதம் நமக்கு எழுதியிருக்கிறார்கள். " உங்களுடைய மாநிலத்தில் அதிகமாக டாக்டர்கள் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். 400 ஆண் டாக்டர்களும், 350 பெண் டாக்டர்களும், 150 பேர் சுகாதாரத்துறையிலும் தேவைப்படுகிறார்கள். அவர்களை ஏற்றுக்கொள்ள இந்த அரசு தயாராக இருக்கிறது. இதற்கு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் வேண்டாம், சீலிங் கமிட்டி சிபாரிசும் வேண்டாம். கணவன்-மனைவி இரண்டு பேரும் டாக்டர்களாக இருந்தால் அவர்கள் இருவரையும் ஒரே இடத்தில் அமர்த்தி பணியாற்றிட வாய்ப்புத் தருகிறோம். விருப்பம் உடையவர்களை அனுப்பி வைக்க முயற்சி எடுத்துக்கொள்ளுங்கள். வேலைவாய்ப்புத் தர ஆயத்தமாக இருக்கிறோம் " என்ற முறையில் நேற்று ஒரு கடிதம் வந்தது. இதுபற்றி அறிவிப்பு செய்து, யார் யார் அங்கே செல்வதற்கு தயாராக இருக்கிறார்களோ அவர்களை அனுப்பத் தயாராக இருக்கிறோம். வேலைவாய்ப்பு கிடைக்கத் தக்க விதத்தில் சம்பள விகிதமும் இருக்கும். அதனுடைய விவரங்கள் தனியே சொல்லப் பட்டிருக்கின்றன.

மேலும், இங்கே இருக்கின்ற, அசிஸ்டெண்ட் டைரக்டர், ஆர்மி மெடிகல் கோர், இந்தியன் ஆர்மி என்பவரிடமிருந்து, 800 டாக்டர்கள் பதவி இன்றைக்கு ராணுவத் துறையில் காலியாக இருப்பதாக குறிப்பு தந்திருக்கிறார்கள். ராணுவத்தில் வேலை செய்ய ஓரிருவர் தான் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, வேலை வாய்ப்பு உள்ள இடங்களை இன்னும் நல்லமுறையில் விளம்பரப்படுத்தி விருப்பமுள்ளவர்கள் அங்கெல்லாம் வேலைக்குச் செல்லவும் வசதி ஏற்படுத்தித்தருமாறு சொல்லியிருக்கிறேன். முற்பகல் 10-30

இரண்டாவதாக கோரிக்கையாக அவர்கள் வைத்திருப்பது false propaganda that doctors are unwilling to serve in rural areas **should be stopped** என்பதாகும். கிராமப்புறங்களுக்குப் போவதில்லை என்று சொல்வதை தவறான பிரச்சாரம் என்கிறார்கள். உறுப்பினர் வரதராஜன் அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். கிராமப் பகுதிகளில் எந்த எந்த இடங்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு டாக்டர்களைப் போஸ்ட் செய்தோம், அவர்கள் போகமாட்டேன் என்று லீவு போட்டார்கள், திரும்பவும் போஸ்ட் செய்தபோது லீவு கொடுக்காமலேயே போகாதிருக்கிறார்கள் என்பதற்கான புள்ளிவிவரங்கள் அனைத்தையும் என்னால் கொடுக்க முடியும். சிலபேர்கள் வேண்டுமானால் போக விருப்பம் உள்ளவர்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1970 செப்டம்பர் 2

களாக இருக்கலாமே தவிர பொதுவாக விருப்பம் உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பது சரியல்ல. இப்போதுகூட இன்னும் 50 இடங்கள் பூர்த்தி செய்யப்படாமல் பொதுநலத்துறையில் இருக்கின்றன. ஆகவே கிராமப் புறங்களுக்குப் போக மறுக்கிறார்கள் என்பது தவறான பிரச்சாரமாகாது.

அடுத்து அவர்கள் வைத்திருக்கிற மற்றொரு கோரிக்கை Increase of medical colleges should be stopped and admissions should be restricted to half the present number என்பதாகவும், அதுபற்றியும் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. திருச்சியிலும், சேலத்திலும் மருத்துவக் கல்லூரி ஏற்படுத்தவேண்டுமென்ற ப்ரபோசல் இருக்கிறது. முன்பே கொஞ்சம் நிதி வசூல் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் வசூல் செய்யத் தயாராய் இருக்கிறார்கள். இருந்தும் இருக்கக்கூடிய சூழ்நிலைகளை எல்லாம் நேற்றே விளக்கி—அவற்றை உடனடியாக ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை என்பதையும தெரிவித்திருக்கிறேன். திரு. ஹாண்டே அவர்கள் மீண்டும் நேற்று நடந்த பிரச்சினையைக் கொண்டுவந்தார்கள். இதில் எனக்கும் நிதி அமைச்சருக்கும் கருத்துவேறுபாடு கிடையாது. அவர் குறிப்பிட்டது ப்ரபோசலைத்தான். நான் குறிப்பிட்டது சாங்ஷன் பற்றியதுதான். ஆயினும் எப்போதும் நம்முடைய மாநிலத்திற்கு 8 மருத்துவக் கல்லூரிகளே போதும் என்று சொல்லி விட முடியாது. அடுத்த ஐந்தாண்டுக்குள் நிலைமை எப்படி இருக்கும் என்றும் சொல்ல முடியாது. நாம் ஜனத்தொகை அடிப்படையில் இத்தனை மக்களுக்கு ஒரு டாக்டர் என்று இருக்க வேண்டும் என்பதாக கணக்கிட்டுத்தான் மருத்துவக் கல்லூரிகள், இடங்கள் ஆகியவற்றை சர்க்கார் நிர்ணயிக்கிறது.

இவர்களுடைய கோரிக்கையில் மற்றொன்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்போதுள்ள 1,125 மருத்துவக் கல்லூரி இடங்களை சரிபாதியாக 605 ஆகக் குறைத்துவிடவேண்டும் என்று சொல்கிறார்கள். இந்த ஆண்டே மருத்துவக் கல்லூரிக்கு "பி" ப்ளஸ் சராசரியாக இருக்கவேண்டும் என்று சொல்லியும் ஏழாயிரம்பேர்கள் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் மருத்துவத் துறையில் சேர்ந்து படிக்க வாய்ப்பில்லையே என்று தவிக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை எவ்வளவு இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ளலாம். முன்பே சேர்ந்து நான்காவது, ஐந்தாவது ஆண்டு படித்துக் கொண்டிருக்கக் கூடியவர்களுக்கு வேண்டுமானால் இப்படிச் செய்வது சாதகமாக இருக்குமே தவிர படிக்க இடம் கிடைக்காது தவிக்கிறவர்களுக்கு அனுகூலமானதாக இருக்காது. ஆகவேதான் உடனடியாக எண்ணிக்கையைக் குறைப்பதற்கு வாய்ப்பில்லை என்று விளக்கம் தந்திருக்கிறேன். Introduction of three year condensed medical course should be banned

அடுத்த கோரிக்கையாக டி.எம்.எஸ்., ஜி.ஸி.ஐ.எம். கோர்சுக்காக 3 ஆண்டுப் படிப்பு இருப்பதை நிறுத்திவிடவேண்டும் என்பது.

1970 செப்டம்பர் 2] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

1970–71-ம் வருடத்துடன் இந்த 3 ஆண்டுப் படிப்பு நிறுத்தப்பட்டு விடுகிறது. இனிமேல் 3 ஆண்டுப் படிப்பு இல்லை என்பதும் தெளிவு படுத்தப்பட்டிருக்கிறது.

Employment opportunities to men medical graduates in family planning centres ஐந்தாவதாக குடும்ப நலத்திட்டத் துறையில் ஆண் டாக்டர்களுக்கும் இடம் அளிக்கப்படவேண்டும் என்பது. இப்போதே ஆண் டாக்டர்களும், பெண் டாக்டர்களும் பணியாற்றி வருகிறார்கள். ஆனால் ஐ.யு.ஸி.டி. பிரகாரம் அந்தப் பகுதியில் ஆண் டாக்டர்களைப்போட்ட காரணத்தினால், மக்களிடத்தில் இருந்து எதிர்ப்பு கிளர்ச்சி வந்தது எல்லோருக்கும் தெரியும். ஆகவே அத் துறையில் பெண் டாக்டர்களை மட்டும் தான் போடுவது என்று தீர்மானிக்கப்பட்டுவிட்டது. மற்றவகையில் குடும்ப நலத் திட்டத்தில் ஆண் டாக்டர்களும் நியமிக்கப்பட்டே வருகிறார்கள்.

அடுத்தபடியாக, only medical graduates must be allowed to teach medical subject and non-medical graduates should not be allowed என்பதான கோரிக்கையை முன்வைத்திருக்கிறார்கள். ஏற்கனவே போதனை துறைக்கு டாக்டர்கள் வர மறுத்த காரணத்தினால், எம்.எஸ்.ஸி. படித்தவர்களை அனடமி, பிஸியாலஜி, பயோ கெமிஸ்ட்டிரி, பார்மகாலஜி துறைகளில் போட்டு வந்தோம். இப்போது டாக்டர்களே அத்துறையில் பணியாற்ற முன்வருவதாக இருந்தால்–எம்.எஸ்.ஸி. படித்தவர்களை அபயன்ஸில் வைத்து–பி.எஸ்.ஸி., எம்.பி.பி.எஸ். பட்டதாரிகளை அவற்றுக்குப்போடுவது பற்றி ஆட்சேபனை இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ICBM examinations should be held in India. அதைத்தவிர முன்போலவே ஐ.ஸி.பி.எம். பரீட்சைகள் இங்கே நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கை வைத்திருக்கிறார் கள். ஐ.ஸி.பி.எம். என்பது அமெரிக்க ஸ்தாபனத்தார் இங்கே பரீட்சை நடத்தி–அதில் தேர்ச்சி பெறுகிற சிறந்த மாணவர்களை அமெரிக்காவுக்கு அழைத்துப்போகிறார்கள். அதன் காரணத்தினால் இங்கே ப்ரெய்ன்–ட்ரெய்ன் ஆகிவிடுகிறது என்பதாகக் கருதி சிறந்த மாணவர்களுடைய தேவை நம்நாட்டுக்கு அவசியம் என்பதாகக் கருதி மத்திய அரசாங்கம் அதுபோல் பரீட்சை நடத்துவதைத் தடை செய்திருக்கிறது. ஆகவே, பரீட்சைகள் இப்போது நடக்கிறது இல்லை. என்றாலும் கூட 1970-இல் ஆவது அந்தப் பரீட்சையைக் கொண்டுவரலாம் என்பதாக நாம் இந்திய அரசாங்கத்திற்கு எழுதினோம். அவர்கள் மறுத்துவிட்டார்கள். மீண்டும் இந்திய அரசாங்கத்திற்கு எழுத இந்த அரசு தயங்காது.

ஆக இப்படி 7 கோரிக்கைகளை அவர்கள் வைத்திருக்கிறார்கள். அவற்றில் எது சாத்தியம், எது சாத்தியம் இல்லை என்பதை நான் காரணங்களோடு எடுத்துச் சொல்லியும் அவர்கள் வேலைநிறுத்தம் செய்திருக்கிறார்கள் என்றால், இது மிகவும் வருந்தத்தக்கதாகும். அரசுத்தரப்பில் இவ்வளவு தெள்ளத் தெளிய இருக்கக்கூடிய விஷயங்களை எடுத்துச் சொல்கிறபோது இதை ஐ வாஷ் என்பதாக

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [1970 செப்டம்பர் 2

அபிப்பிராயம் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பேரவையின் மூல மாகவும் கேட்டுக்கொள்கிறேன். இதுபோல வேலைநிறுத்தம் செய்து நோயாளிகளுக்குச் சங்கடத்தை உண்டாக்குவது சரியான தாக ஆகாது.

ஸ்டைபன்டைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி யும் நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். ஒரு 10, 15 ஆண்டுகளுக்கு முன்னாலே ஹவுஸ் சர்ஜன்களுக்கு ஸ்டைபண்டே கிடையாது. கொஞ்சம் கொஞ்சமாக நமது மாநிலத்திலே கொடுத்து இப்போது 150 ரூபாயாக வந்துள்ளது. பக்கத்திலே இருக்கிற மாநிலங்களில் எல்லாம் எவ்வளவு தருகிறார்கள் என்று பார்த்தால், மைசூர் மாநிலத் தில் 150 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள் ஹவுஸ் ரெண்ட் அலவன்ஸ் 15 ரூபாய் தருகிறார்கள். நாம் கடந்த வரவு செலவுத் திட்டத்தின் போது 150 ரூபாயிலிருந்து 175 ரூபாயாக மாற்றி இருக்கிறோம். அந்த 175 ரூபாயுடன் அவர்களுக்கு ஃபிரீ குவார்ட்டர்ஸ் கொடுத்து இருக்கிறோம். பக்கத்திலே இருக்கிற கேரள மாநிலத்திலே 150 ரூபாயும் ஃபிரீ குவார்ட்டர்ஸும், ஆந்திர மாநிலத்தில் 150 ரூபாயும் பிரீ குவார்ட்டர்ஸும், கிரிஸ்டியன் மெடிகல் காலேஜ் வேலூரிலே ரூ. 100-ம் ஃபிரீ குவார்ட்டர்ஸ் கொடுக்கிறார்கள், ஜிப்மர், பாண்டிச்சேரியில் ரூ. 175-ம் ஃபிரீ குவார்ட்டர்ஸும் கொடுக்கிறார்கள். அந்த அளவை வைத்துத்தான் மத்திய அரசாங் கத்தாரால் நடத்தப்படுகின்ற அந்த போஸ்ட் கிராஜுவேட் மெடிக்கல் காலேஜை வைத்துத்தான் நாமும் அதே அளவுக்கு உயர்த்திக் கொடுத்திருக்கிறோம்.

ஆகவே, கொடுக்கப்பட்ட கோரிக்கைகள் அத்தனையும் அரசு பரிசீலித்து எந்த அளவுக்கு செய்யவேண்டியதை, செய்ய முடிந்ததை செய்ய இந்த அரசு தயாராக இருக்கிறது என்று கூறிக்கொள்ளு கிறேன். இதற்குப் பிறகும் அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். நான் இந்தப் பேரவையிலே தெரிவித்த கருத்துக்களை, உறுதிமொழிகளை ஏற்றுக் கொண்டு அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடாமல், ஆஸ்பத்திரி களுக்குத் திரும்பவேண்டுமென்று இந்தப் பேரவையின் மூலமாக கேட்டுக் கொள்ளுகிறேன். ஆகவே இந்த அரசு ஏற்கனவே நட வடிக்கை எடுத்திருக்கிற காரணத்தால், இன்னும் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி கண்காணித்துக் கொண்டிருக்கிற காரணத் தாலும், இந்த அவையின் பிற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இது பற்றி விவாதிப்பதற்கான தேவை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற விரிவான விளக்கத்திற்குப் பிறகும், இதன் மேல் தங்கள் கருத்துக்களை உறுப்பினர்கள் நிதி ஒதுக்க மசோதா வின் பேரில் நடைபெறவிருக்கும் விவாதத்தில் எடுத்துக் கூறுகின்ற வாய்ப்பு இருக்கிற காரணத்தாலும், இந்த ஒற்றி வைப்புத் தீர்மானத்துக்கு அனுமதி மறுக்கிறேன்.